**I.D.O.P. No. 15/2015**

**03.11.2023**

எ.ம.த.சா. 2- திருமதி.எலிசபெத், க/பெ. விஜயன்

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை .</u>**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் இருவீட்டாரால் பார்த்து நிச்சயிக்கப்பட்டதாகும். திருமணத்தின் செலவை இருவீட்டாரும் சேர்ந்து செய்தோம். மனுதாரருக்கு நாங்கள் கொடுத்த நகைகள் தற்பொழுது மனுதாரர் வசம் தான் உள்ளது. மனுதாரரும் எதிர்மனுதாரரும் திருமணம் ஆன உடனேயே பெங்களூருவில் சுமார் 4 மாதங்கள் தங்கியிருந்தார்கள். மனுதாரர் அந்த சமயத்தில் பெங்களூருவில் வேலை பார்த்தார். மனுதாரர் பெங்களூருவில் வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டார். மனுதாரர் வேலையை விட்ட விவரம் அப்போது எங்களுக்கு தெரியாது. மனுதாரர், எதிர்மனுதாரரின் சிகிச்சை சம்மந்தமாக ஆவணங்கள் சிலவற்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் மருத்துவர் சுரேஷ் என்பவரிடம் சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை. மனுதாரருக்கு சிகிச்சை மேற்கொள்ளத்தான் எதிர்மனுதாரர், மனுதாரருடன் மருத்துவர் சுரேஷை பார்க்கச்சென்றார். எதிர்மனுதாரர் 10ம் வகுப்பு தேர்ச்சி பெறாத காரணத்தினால் ஏற்பட்ட மன அழுத்தத்தின் காரணமாக எதிர்மனுதாரரை மருத்துவர் சுரேஷிடம் சிகிச்சை பெற அழைத்துச்சென்றோம். ஒரே ஒருமுறை தான் எதிர்மனுதாரரை சிகிச்சைக்காக அழைத்துச்சென்றோம். மனுதாரரும் எதிர்மனுதாரரும் கடந்த 8 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக மனுதாரரின் வீட்டிற்கு சென்று 2 அல்லது 3 முறை சமாதானம் பேசினோம். அப்பொழுது மனுதாரர் குடும்பத்தில் அனைவரும் இருந்தார்கள். தாம்பரம் சர்ச் போதகரை வைத்து சமாதானம் பேசினோம். மனுதாரர் மாதம் மாதம் ரூபாய் 5,000/- என்னுடைய வங்கிக்கணக்கிற்கு பணம் செலுத்தி வருகிறார். கடந்த 2 மாதங்களாக மாதம் ரூபாய் 10,000/- அனுப்பி வருகிறார். மனுதாரர் மே மாதம் 2015ம் வருடத்திலிருந்து எதிர்மனுதாரருக்கு மாதம் ரூபாய் 5,000/- செலுத்தி வருகிறார். மனுதாரருக்கு நாங்கள்

குறுஞ்செய்தி அனுப்பினால் தான் மேற்படி தொகையை செலுத்துவார். ஒன்று, இரண்டு மாதங்கள் அனுப்பாமல் விட்டுவிட்டால் தொகையை மொத்தமாக அனுப்புவார் என்றால் சரியல்ல. மனுதாரர் விவாகரத்து கோருவதற்கு கூறியுள்ள காரணங்களை நான் தெரிந்துகொண்டேன். எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதில் உரையின் சாரம்சம் எனக்கு தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் உள்ளார் என்று எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் மனுதாரர், எதிர்மனுதாரருக்கு தான் வேறு பெண்ணுடன் வாழப்போவதாகவும் எதிர்மனுதாரரையும் வேறு நபருடன் வாழ சொல்லி அனுப்பிய குறுஞ்செய்தி மூலமாக தெரிந்துகொண்டேன். எதிர்மனுதாரர் என்னிடம் மேற்படி குறுஞ்செய்தியை காட்டியதன் மூலம் தெரிந்துகொண்டேன். எதிர்மனுதாரர், மனுதாரரை தொடர்ந்து தொல்லை கொடுத்தார் என்றாலும் அதன்காரணமாகவே மனுதாரர் இந்த மனு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்ட பேரில் தான் மனுதாரர் பெங்களூருவில் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பம் இருந்திருந்தால் மனுதாரரை பற்றி தவறாக வேறு பெண்ணுடன் தொடர்பில் இருப்பதாக கூற வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் அவ்வாறு யாருடனும் தொடர்பில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.